செய்தி வெளியீடு எண்: 513 நாள்:19.08.2019

**இன்று (19.08.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், நங்கவள்ளியில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தினை துவக்கி வைத்து நலத்திட்டஉதவிகள் வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து எடப்பாடி மற்றும் கொங்கணாபுரத்தில் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை:**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற அத்தனைபேருக்கும் முதற்கண் எனது பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

எடப்பாடி தொகுதி மக்களின் கோரிக்கைகளை தொடர்ந்து அம்மாவின் அரசு நிறைவேற்றி வருகின்றது. எடப்பாடி தொகுதி மக்களின் கோரிக்கைகளை ஏற்று, உயர்கல்வி கற்பதற்கு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வழங்கி, இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் பயிலக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்தார்கள்.

அம்மாவின் அரசினால், ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் புதிய மருத்துவமனை கட்டடம், கவுண்டம்பட்டியிலிருந்து வெல்லாண்டிவலசு வரை பாலம், கவுண்டம்பட்டியிலிருந்து நகரத்திற்கு வருவதற்கான நடைபாலம், பால் சொசைட்டி, கூடுதல் பள்ளிக் கட்டடம், மாதிரி பள்ளி ஆகியவை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. எடப்பாடியிலிருந்து பல்வேறு நகரங்களுக்குச் செல்வதற்கு ஏதுவாக பேருந்து வசதிகளை செய்யப்பட்டுள்ளது. சித்தூரில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. எடப்பாடியிலிருந்து புறவழிச் சாலை அமைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் மின்சார கோட்ட அலுவலகம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மத்திய கூட்டுறவு வங்கியின் புதிய கிளை அமைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களை சேமித்து வைக்க மார்கெடிங் கமிட்டி மூலம் வெள்ளரிவெள்ளியில் கிடங்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

சரபங்கா நதியின் இரண்டு பகுதிகளும் சீர் செய்யப்படும். சரபங்கா நதியின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும். கோனேரிப்பட்டியில் கட்டிக் கொடுத்த ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்த ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்படும். தொழில் வளத்தைப் பெருக்க, எட்டிக்குட்டைமேட்டில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கப்படும்.

மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, மேட்டூரிலிருந்து வரும் உபரி நீரை நீரேற்று மூலம், ரூபாய் **565** கோடி மதிப்பீட்டில் மேட்டூர், ஓமலூர், சங்ககிரி, எடப்பாடி சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள **100** ஏரிகளில் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எடப்பாடி நகர மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்கிட, பூலாம்பட்டியிலிருந்து தண்ணீர் எடுத்து, சுத்திகரித்து வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஒன்றியங்களை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர் திட்டம் உருவாக்கி பாதுகாக்கப்பட்ட காவேரித் தண்ணீர் வழங்கப்படுகிறது. மேலும், விடுபட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு விரைவில் காவேரிக் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருச்செங்கோட்டிலிருந்து ஓமலூர் வரையுள்ள சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றியமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

எடப்பாடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அருகிலுள்ள சாலை, ரூபாய் **3.50** கோடி மதிப்பீட்டில் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எட்டிக்குட்டைமேட்டில் புதிய துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. வெள்ளாளபுரத்தில் மாதிரிப் பள்ளி கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. எட்டிக்குட்டைமேட்டில் B.Ed., கல்லூரி இந்த ஆண்டு துவங்கப்படவுள்ளது.

சமுத்திரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு கொங்கணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் **30** படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மேம்படுத்தப்பட்டுள்ளது. கொங்கணாபுரத்தில் பேருந்து நிலையம், சாக்கடை வசதி, கொங்கணாபுரம் சந்திப்பில் நீரூற்று போன்ற பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. கொங்கணாபுரத்தில் புதிய காவல் நிலையம் அமைக்கப்பட்டு அதற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சிறந்த சாலை வசதிகளை அமைத்துக் கொடுத்த அரசு அம்மாவின் அரசு. இந்திய அளவில், மருத்துவம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

குடிமராமத்துத் திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக **2017–2018**ஆம் ஆண்டில் **1519** ஏரிகளும், இரண்டாம்கட்டமாக **2018–2019**ஆம் ஆண்டில் **1511** ஏரிகளும் தூர்வாரப்பட்டுள்ளன. **2019–2020**ஆம் ஆண்டில் ரூபாய் **500** கோடி மதிப்பீட்டில் **1829** ஏரிகளில் தூர்வாரும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டம் முழுக்க முழுக்க விவசாயிகளையும், ஆயக்கட்டுதாரர்களையும் ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்டு

வருகிறது. நதிகள், ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள் அமைக்க ரூபாய் 1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஓசூரில் மிகப்பிரம்மாண்டமான உலகத் தரத்தில் மலர் ஏல மையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

எல்லாம் வல்ல இறைவன் அருளால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் 115 அடியை எட்டியுள்ளது. தற்பொழுது அணைக்கு சுமார் 33 ஆயிரம் கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. எனவே, எஞ்சிய 5 அடியும் உயர்ந்து விரைவில் அணை நிரம்பும். இதன் மூலம் மேட்டூர் மேற்கு மற்றும் கிழக்குக்கரை விவசாயிகள் மற்றும் டெல்டா பாசன விவசாயிகளுக்குத் தேவையான தண்ணீர் வழங்கப்படும்.

பொதுமக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றி வரும் ஒரே அரசு அம்மாவின் அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

------

**சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்ட துவக்க விழாவில், பொதுமக்களிடமிருந்து நங்கவள்ளியில் 1019 மனுக்கள் பெறப்பட்டு, அதில் 9 மனுக்கள் மீதும், எடப்பாடியில் 1331 மனுக்கள் பெறப்பட்டு, அதில் 20 மனுக்கள் மீதும், கொங்கணாபுரத்தில் 1712 மனுக்கள் பெறப்பட்டு, அதில் 24 மனுக்கள் மீதும், ஆகமொத்தம் 4062 மனுக்கள் பெறப்பட்டு, அதில் 53 மனுக்களுக்கு உடனடித் தீர்வு காணப்பட்டு 53 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**